முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கழற்சிங்க நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.11.2018, புதன்கிழமை

1. **தவயோக ஞானியே அரங்கா**
**தன்னார்வ தொண்டு பெருக்கி**
**அவனியை மாற்றம் செய்ய வந்த**
**அவதார யோகியே தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தேள் திங்கள்**
**அறிவிக்க வியதிகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2018, புதன்கிழமை)**
3. **வாரமதில் கழற்சிங்க நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா சக்திகள் கூடி
சுத்தநெறி வரும் மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் அரங்கன் ஆளுமை
மண்ணுலகில் ஏற்று வருதலுற
தேக்கமிலா எல்லா வரமும்
தெளிவும் திடமும் தெய்வ பலமும்
5. பலமும் கூடி பாதுகாப்பு பெறுவர்
பாருலகில் ஆயுள் கீர்த்தி
வளமும் வசதியும் அடைவர்
வல்லமை கூட்டும் அரங்கன் தர்மம்
6. தர்மம் வேண்டி வளர்க்க உண்டான
தரணியெங்கும் உள் வெளிப் பணியென
தர்ம வசூல் தொண்டு புரிபவர்கள்
தவராசனுக்கு பயந்து நடக்க வேண்டும்
7. வேண்டியே பொருள் பற்று கொள்ளா
வேலவன் நிதி இது என எண்ணி
உண்டான வசூல் நிதிகளை
உயராசானிடம் ஒப்படைத்து சரணடைவு கொண்டு
8. சரணடைவு கொண்டு செயல்பட
சமதர்ம சன்மார்க்க நெறி வழி
சரணடைந்து அகலா தொடர
சகலருக்கும் பாதுகாப்பு பலம்
9. பலம் தரும் ஞான வாழ்வுடன்
பக்குவமுடன் சகல வளமும்
நலமுடன் தேக மனோ பலமும்
ஞான சிந்தை தெளிவும் கூடி

10. கூடியே உலக மக்களுக்கு இனி
கூறிடுவேன் அரங்கன் தீட்சை வழி
நாடிடுமே ஆறுமுகனார் ஆசி
நல்கிடுமே அழியாமை எனும் வரம்

11. வரம் தரும் வள்ளலே ஞானியே
வரம் தரும் அண்ணலே தவசியே
வரம் தரும் உன் பெருமை உலகறிய
வையகமே ஞானயுகம் ஆகுமென்பேன் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

## மகான் கழற்சிங்க நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

அநேகம் அநேகம் தவங்களைச் செய்து வெற்றி கண்டிட்ட தவயோக மகா ஞானியே அரங்கமகா தேசிகனே! உலகினில் தன்னார்வ தொண்டினைப் பெருக்கி உலகையே மாற்றம் செய்து ஞானஉலகமாக ஆக்கிடவே வந்துதித்த முருகப்பெருமானின் அவதார யோகியே மகா ஞானியே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கழற்சிங்க நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கழற்சிங்கநாயனார்.

குற்றமற்ற சக்திகள் எல்லாம் ஒன்று கூடி நிற்கும் தூயநெறியில் வருகின்ற மக்களெல்லாம் உலகைக் காக்கவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை ஏற்று அரங்கனை பின்தொடர்ந்து வர, எல்லா வரங்களும் தடையின்றி அவர்களுக்கு கிடைத்து ஞானத்தெளிவும் மனோதிடமும் உண்டாகி தெய்வபலமும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்று தெய்வபலம் பெருகி அருள் பாதுகாப்பையும் பெற்று சிறப்படைவார்கள்.

இவ்வுலகினில் அருள் பெற்ற அவர்கள் நீடிய ஆயுளுடன், புகழ்மிக்கவராய் எல்லா வசதிகளும் வளங்களையும் பெற்று சிறப்படைவார்கள்.

உலகின் வல்லமையை பெருக்கும் சக்தியான அரங்கமகா தேசிகனாரின் தர்மத்திற்காக தர்மத்தை வளர்ப்பதற்காக உள்பணிகள் என்கிற ஓங்காரக்குடிலை சார்ந்தும், வெளிப்பணி என்கிற ஓங்காரக்குடிலை சார்ந்து உலகின் பல்வேறு பகுதிகளில் தர்மத்திற்காக வசூல் தொண்டினைச் செய்பவர்கள் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனுக்கு பயந்து நடக்க வேண்டும். வசூல் செய்திட்ட பொருளை இது முருகப்பெருமானின் நிதி என எண்ண வேண்டும். வசூல் நிதிகளைக் கண்டு பொருள் பற்று கொள்ளக் கூடாது. வசூல் செய்திட்ட பொருளினை உயராசான் ஆறுமுக அரங்கனிடம் ஒப்படைத்து அரங்கனிடத்து சரணடைவு கொண்டு பணிவுடன் செயல்பட வேண்டும். சமதர்மத்தின்படியும் சன்மார்க்க கொள்கைகள்படியும் ஏற்று சமதர்ம சன்மார்க்க கொள்கையினின்று விலகாமல் தொடர்ந்து செல்ல வேண்டும்.

இவ்விதமே நெறியுடன் பொருள் பற்று கொள்ளாது வாழ்ந்திட சகலருக்கும் பாதுகாப்பும் அருள்பலமும் பெருகிடும். அவர்கள் ஞானவாழ்வினை பெற்று பக்குவமுடன் சகலவளமும் நலமுடன் தேக ஆரோக்கியத்துடன் மனோபலம் மிக்கவராய் வாழ்ந்து ஞானசிந்தை தெளிவு பெற்று வாழ்வார்கள்.

இனி வருங்காலங்களில் உலக மக்களுக்கு முருகப்பெருமான் ஆசியானது ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடம் பெறுகின்ற தீட்சையின் மூலமாக வெளிப்பட்டு முருகப்பெருமான் அரங்கனை சார்ந்து ஆசிகளை வழங்கிடுவார். அழியாமை எனும் அழிவிலாமை வரமும் பெறும் வாய்ப்பையும் பெற்றிடலாம்.

அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு வரம் அருளும் கருணையே வடிவான மகா ஞானியே வள்ளலே அரங்கமகா தேசிகனே அண்ணலே வரம் தரும் மகா தவசியே எல்லையற்ற வரமளிக்கும் உமது பெருமையை உலகம் அறிய அறிய இந்த உலகமே உம்மால் ஞானயுகமாக ஆகிடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய அரங்கன் பெருமையை உரைக்கின்றார் மகான் கழற்சிங்கநாயனார்.

–சுபம்–